# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்


பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2018 மடங்கல் - கன்னி (20-9-1987) 85 காசுகள் (இதழ் எண்: 91)


# மக்கள் தண்டனையை மரபாக்குவதா?

## தமிழினப் போராட்ட முயற்சிகளைப் பொது மக்கள் அடையாளங் கண்டு கொள்ள வேண்டும்!

### வல்லாண்மை அரசின் ஒடுக்கல் முயற்சிகளை முறியடிப்பதற்கு மக்கள் துணைநிற்பதே நல்லது!




செப்டம்பர் முதல் நாள் திருச்சி மாவட்டப் பொன் பரப்பியில் *தமிழ் நாடு விடுதலைப் படையின்* அமைப்பாளர் *தமிழரசனும்* அவர் கொள்கையைச் சார்ந்த *செகநாதன், தருமலிங்கம், அன்பழகன், பழனிவேல்* ஆகியோரும், அங்குள்ள மாநில வைப்பகத்தில் கொள்ளையடித்தனர் என்பதற்காக, அவ்வூர் மக்களால் அடித்துக் கொல்லப்பட்ட செய்தி அனைவரும் அறிந்ததே!

இந்த நிகழ்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு, முதலாளியப் போக்குள்ள தமிழகத்தின் செய்தித்தாள்கள் அனைத்தும் அவர்களின் மேல் சேற்றையும் நெருப்பையும் வாரி வீசியுள்ளன. இது போன்ற செய்திகளை அச் செய்தித்தாள்கள் பரபரப்புடனும், ஆரவாரப்படுத்தியும் வெளியிட்டுத் தீங்களின் பணவருவாயைப் பெருக்கிக் கொள்வது வேறு. அந் நிகழ்ச்சியைக் கொச்சைப் படுத்தித் தரக் குறைவாகத் திறனாய்வு செய்வதென்பது வேறு!

மத ஆளுமையும் முதலாளியச் சார்பும் கொண்ட ஒரு கொடுமையான அரசின் நடை முறைகளைக் குடியரசு முறைப்படி எதிர்த்துப் போராடுவதில் வெற்றி பெற முடியும் என்னும் நம்பிக்கையை இழந்த- (தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# உ.த.மு.க. செய்திகள்

## பெரம்பலூர் - கலந்துரையாடல்.

திருச்சி மாவட்டம் பெரம்பலூரில் - 007 படப் பிடிப்பு நிலையத்தில் 22-8-87 அன்று மாலை 6 மணியளவில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கலந்துரையாடல் பாவலர் வேல். இளங்கோ தலைமையில் நடைபெற்றது. புலவர்கள் சா. தங்கப் பிரகாசம் (பொன்ஞெளியனர்), அரங்கராசனர், ந. சுப்பையா, ந. சின்னையா, திருவாளர்கள்: மு. சின்னச் சாமி, செம்பியன், கி. வைத்திலிங்கம், தமிழ்மாறன், பிச்சைப் பிள்ளை, ஓவியர் முகுந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர், உ. த. மு. க. துணைப் பொதுச் செயலர் திரு. தென்னவன்கோ, "தமிழகத்தின் இன்றைய நிலை" பற்றியும், தென் மொழி, உ.த. மு. க. வின் பணிகள் பற்றியும் நீண்ட நேரம் விளக்கிய பின் கலந்துரையாடல் இடம் பெற்றது. உ. த. மு. க. முதல்வர் பாவலரேறு அவர்களை அழைப்பது எனவும் பொதுக் கூட்டம் நடத்துவது எனவும் தீர்மானம் நிறைவேறியது. இக் கலந்துரையாடலுக்குத் தென்மொழி அன்பர் திரு. செம்பியன் சிறப்பான ஏற்பாடு செய்திருந்தார்.

## வேளச்சேரி, சென்னை - கலந்துரையாடல்.

சென்னை -வேளச்சேரி சுங்கச் சாவடி (Check Post) - நாகேந்திரபுரத்தில் 24-8-87 திங்கட்கிழமையன்று மாலை 6 மணியளவில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் கலந்துரையாடல் நடைபெற்றது. திரு. வெற்றிச் செல்வன் கலந்துரையாடலின் நோக்கம் பற்றியும், வந்திருந்தோரை வரவேற்றும் உரையாற்றினர்.

திருவாளர்கள்: அன்பு, வேளச்சேரி, பாலன், நேருநகர் - கொத்தவால் சாவடி, பாசுகர். க. மு., சுங்கச் சாவடி (Check Post), சம்பத் (I. T. I.), திராவிடர் கழகம், இராசா, தமிழ்ப் பாதுகாப்புக் கூட்டமைப்பு, ஆலந்தூர், இராசன். (ஆடைகள் ஏற்றுமதி), திராவிடர் கழகம் கோவிந்தராசு (தச்சுத் தொழில்) குமரேசன், என். தேவராசு, தி.மு.க ஆர்வலர். இராமன், (மட்கார்டு குழுமம்), கே. புருசோத்தமன், நன் மங்கலம். குணசேகரன், (நடத்துநர்), தி.மு.க. வட்டப் பொருளர். தாமோதரன், (கட்டடவேலை); மகேந்திர நகர்., திரு. கண்ணன், (அலுமினியத் தொழில்) தி. மு. க. தென்மொழி, நா. இளமாறன், உ.த.மு க. தென்மொழி பா. முருகவேள், உ. த. மு. க. துரை. தென்னவன், உ. த. மு. க. ஆகியோர் கலந்து கொண்டனர். உ.த.மு.க. துணைப் பொதுச் செயலர் திரு. தென்னவன்கோ உ த மு க. வின் உயர்ந்த கொள்கைகளை விளக்கியும், கொள்கைச் செயற்பாட்டுத் திட்டங்கள் பற்றியும் 2.30 மணி நேரம் அரியதோர் உரை நிகழ்த்தவும், இடையிடையே அன்பர்கள் கிளத்திய வினுக்களுக்குத் தென்மொழி, ப. முருகவேளும், தென்மொழி நா. இளமாறனும் விளக்கமளித்தனர். இறுதியில் திரு. வெற்றிச் செல்வன் நன்றி நவில, இரவு 11 மணியளவில் கலந்துரையாடல் இனிதே நிறைவெய்தியது. துணைப் பொதுச் செயலருக்கும், அன்பர்கள் சிலருக்கும் திரு. வெற்றிச்செல்வன் இல்லத்தில் இரவு உணவு படைக்கப்பட்டது.

## கோவை உ. த. மு. க. அமைப்பாளர் பல்லடம் ஆறுமுகனரின் மருகர் பாபுவைப் பாவலரேறு கோவை மருத்துவமனையில் பார்த்து ஆறுதல் கூறினர்.

அண்மையில், உலகத்தமிழின முன்னேற்றக் கழக கோவை மாவட்ட அமைப்பாளரும், புரப்பாளருமான பல்லடம் திரு. மா. ஆறுமுகனரின் மருகர் திரு. பாபு அவர்கள் கேரளத்திற்கு 25-7-87 காரி அன்று மகிழுந்தில் செலவு மேற்கொண்ட பொழுது நேர்ச்சிக் குள்ளாகி உயிருக்கு ஏதமான நிலையில் சேர்த்தலை கே. வி. எம். மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அறுவைப் பண்டுவம் முதலிய ஒரு மாத தீவிர மருத்துவத்திற்குப் பிறகு, நலம் பெற்றுப் பொது மருத்துவம் பெறுவதற்காகக் கோவை, குப்புசாமி மருத்துவமனையில் 8-9-87 அன்று சேர்க்கப் பெற்றுர். அவரைக் காணத் தம் திருச்சி மாவட்டச் சுற்றுச் செலவிற்குப் பின் கேரளம் செல்ல விருந்த கழக முதல்வர் பாவலரேறு ஐயா, அவர்கள் கோவை வந்த செய்தியையறிந்தவுடன், அன்றே பல்லடம் வந்து சீனி. செந்தேவன் அவர்களுடன் மருத்துவமனைக்குச் சென்று ஆறுமுகனுர்க்கும், அவரது குடும்பத்தாருக்கும் ஆறுதல்களையும், ஊக்க உரைகளையும் கூறி, அவர் மீட்புயிர்பெற்று நலம் பெற மாந்த நேயத்தோடும், கடமையுணர்வோடும் கேரள மருத்துவர் திரு. இராணசித் பட்டாச்சாரியாரையும், அங்குள்ள செவிலியரையும், பாராட்டி உரைத்ததோடு, இக்கால் பண்டுவம் பார்க்கும் மருத்துவர்களையும், மருத்துமனைப் பணியாளர்களையும், கண்டு பாபு மேலும் முழு நலம் பெறச் செய்ய வேண்டிய மருத்துவப் பணி நிலைகளையும் ஊக்கப்படுத்தி, அவர் நலம் பெற வேண்டி வாழ்த்திச் சென்றுர். செய்தி:- சீனி. செந்தேவன்.

### அன்பர்கள் கவனிக்க !

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில், மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேம்.

-அமைச்சர்.

# மணப்பாறை வட்டக்கிளை சார்பில் உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்தின் இரு சிறப்பு நிகழ்ச்சிகள்!

## 1. தமிழின மேம்பாட்டுக் கலந்துரையாடல்.

திருச்சி மா. வ. மணப்பாறை வழிச்செல்வோர் விடுதியில் சென்ற தி. பி. 2018 மடங்கல். 19 (4-9-87) வெள்ளி இரவு 9.30 மணி முதல் இரவு 1.30 மணி முடிய மணப்பாறை வட்ட உ. த. மு. க. சார்பில் "விடிவுக்கு வழி" எனும் தலைப்பிலான தமிழின மேம்பாட்டுக் கலந்துரையாடல் நிகழ்வுற்றது.

தென்மொழி அன்பர் திரு. அறிவுச் செல்வன் தலைமை ஏற்றார். பாவலரேறுவின் தமிழன்னைவாழ்த்துப்பாடலை சிவ. தளபதி தமிழழகன் சே. இசுடாலின் ஆகிய தம்பியர் பாடினர். நெடுநாளைய தென்மொழித் தொண்டரும், மணப்பாறை வட்ட உ. த. மு. க. செயலரும், நிகழ்ச்சி அமைப்பாளருமான **புலவர் திருக்குறள் நாவை. சிவம்** நிகழ்ச்சியில் கலந்து கொள்ள வருகை தந்த அனைவருக்கும் அன்பு பொங்க வரவேற்புரை கூறி, மொழி, இனம், நாடு ஆகியன அடிமையுற்றுக் கிடக்கும் தாழ்வு நிலைக்கு விடிவு எப்போது, அதற்கு வழி என்ன என்பது பற்றிக் கலந்துரையாட வேண்டி, ஒவ்வொருவரும் திருக்குறள் கூறி அறிமுகம் செய்து கொண்ட பின் கலந்துரையாடுமாறு கேட்டுக் கொண்டார். அவ்வாறே அறிமுக நிகழ்வும் நடைபெற்றது. பின். உ. த. மு. க. துணைப் பொதுச்செயலர் **தென்னவன்கோ.** தாழை ந. இளவழகன், கரு. இராசகோபலன், தமிழ்நெறியன் ஆலை ம. கோபாலன், அன்புச் செல்வன் ஆகியோர் பல்வேறு கோணங்களில் வினாக்கள் வழி கலந்துரையாடிய பின்னர் நள்ளிரவு 12 மணி அளவில் **பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள்** உரையாற்றத் தொடங்கினார்கள். செம்மையும் வெண்மையும் கலந்த, மணப்பாறை வட்டக்கிளையின் உ. த. மு. க. பதாகையின் முன்பிருந்து தனித்தமிழ்க் காவலர் அவர்கள் அரிமாவென அமர்ந்து முழங்கிய காட்சி புரட்சிச் செங்கடலிலிருந்து எழு கதிரோன் ஒளிச் சுடர் பாய்ச்சுவதுபோல அமைந்திருந்து எல்லாரின் கவனத்தையும் ஈர்த்தது. உள்ளம், அறிவு, உடல் ஆகியவற்றால் துய்ப்பதே வாழ்வு என்றும், இவற்றின் ஒழுங்கே அறம் பொருள் இன்பம் என்றும், உயிரினம் தனித்தியங்காமல் இனத்தால் ஒத்துப் போதலே நல்லது என்றும், எதனையும் தெரிந்து தெளிந்து ஐயுறவு கொள்ளாமல் உண்மை உணர்தல் வேண்டும் என்றும், அறியாமையை அறிவிப்பதே அறிவு என்றும், அவ்வறிவை ஒழுங்குபடுத்தி நடையிடல் வேண்டும் என்றும் பல்வேறு திருக்குறள் கருத்துகள் வழி இனநல உணர்வேற்றினார். உ. த. மு. க. பிற இயக்கங்கள் போலன்றி உண்மை உழைப்பு இயக்கமாக நடையிடுகிறது என்றும் இதற்கு உழைப்பவர்கள் தாம் உள்ளனர் உறுப்பினர் இலர் என்றும் அறிவு, மனம், உடல் சேர ஒன்றுபட்டு உழைப்பதால் உயிர்க்கு ஊதியம் கிட்டுகிறது என்றும் அவ்வாறு எல்லாரும் உழைக்க முன் வந்தால் விடிவு கிட்டும் என்றும் நெடிய விளக்கங்களுடன் உரையாற்றி அமைந்தார். பின் கரு. இராசகோபாலன் நன்றிகூற கலந்துரையாடல் நிகழ்ச்சி நிறைவு பெற்றது.

## 2. உ. த. மு. க. கொள்கை விளக்கச் சிறப்புக் கூட்டம்.

திருச்சி மா. வ. மணப்பாறை - துவரங்குறிச்சியில் பேருந்துத்திடலில் தி. பி. 2018 மடங்கல் 20 (5-9-87) காரி இரவு 7 மணி முதல் நள்ளிரவு 12.30 மணி முடிய மணப்பாறை வட்டக் கிளையின் உ. த. மு க. கொள்கை விளக்கச் சிறப்புப் பொதுக் கூட்டம் சீருற நடைபெற்றது.

எழுத்தறிவு குறைந்த நடுத்தர ஏழை மக்கள் வாழும் சிற்றூர்கட்கு நடுவிலமைந்த துவரங்குறிச்சியில் உ. த. மு. க. சிறப்புக் கூட்டம் நிகழ்த்த நெடுநாட்களாக முயன்றாலும், திடுமென அமைந்த இக் கூட்டத்தைச் சிறப்புற நடத்திட மணவை வட்ட உ. த. மு. க. தலைவர் திரு. க. கண்ணனும் செயலர் புலவர் திருக்குறள் நாவை. சிவனும் பல்லாற்றானும் இரவு பகலாக உழைத்தனர். பாவலர் அறிவுச் செல்வன் பாவலர் தாழை இளவழகன், கரு. இராசகோபலன், அன்புச் செல்வன் ஆகியோர் விழாச் சிறப்புக்கு இயன்றாங்கு பாடுபட்டனர். விழா அழைப்பறிக்கையும், சுவரொட்டியும் இப்பகுதிக்குப் புதுமையையும் புரட்சி உணர்வையும் தந்தன.

உ. த. மு. க. கொடிகளும், மணவை வட்டக் கிளையின் நெடிய பதாகையும் எல்லாரின் கண்ணையும் கருத்தையும் கவர்ந்திட அமைந்த மேடையில் திருச்சி மாவட்டப் பொருளர் குழந்தை ஈகவரசனார். இன நலப்பாடல்களைச் சலங்கைப் பறையொலியுடன் இசைக்கலானார். மணியங்குறிச்சி, தாழம்பாடி, கரடிப்பட்டி, புத்தாநத்தம், வளநாடு, மருங்காபுரி மணப்பாறை ஆகிய ஊர்களிலிருந்து திரளாக வருகைதந்த மக்கள் குழுமியிருக்க, ஆலை. ம. கோபாலனின் தமிழன்னை வாழ்த்துப் பாடலுடன் கூட்டம் தொடங்கியது. கரடிப்பட்டி ஊராட்சித் தலைவரும், நெடுநாளைய தென்மொழி அன்பரும்

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# இந்திய அரசின் வெறிபிடித்த 'பணவாரி'க்கு, 'இந்தி' வெறிகொண்ட கைப்பிடிகள்!

அரச குடும்ப ஆட்சி வரிசையில் இந்திரா, நேருவுக்கு இளைத்தவராக இல்லாமல் எப்படி நடந்து கொண்டாரோ, அதைவிடப் பன்மடங்கு அதிகமாகவே அவர் மகன் இராசீவ் காந்தி நடந்து கொண்டு வருகிறார்.

ஏந்த ஒரு செயலிலும், இந்தியச் சிறைக் கூட்டத்திற்குள் கட்டுண்டு கிடக்கும் அனைத்துத்-தேசிய இனங்களையும் ஏதேனும் ஒருவகையிலே-னும், 'இந்தி' இனவெறி பிடித்த இராசிவ் கும்பல் அடக்கியே வருகிறது.

இந்தியாவில் உள்ள எந்த இனத்திற்கும், அதற்கென்று தனியொரு பண்பாடு, கலை, இலக்கி-யம், மொழி, வரலாறு இவையெல்லாம் இருப்பதாக அறியாதவர்போலவே, நடந்து கொண்டு, பிற தேசிய இனங்களின் மேற்படி நிலைகளை எந்தச் சிறுவகையிலும் மதிக்காமல், திமிர் பிடித்த இந்தி வெறித் தனத்தில் ஆடுகின்றது இராசிவ் கும்பல்.

இந்தியா என்றாலே
'இந்தி' மொழிதான் — என்றும்,
இந்தியா என்றாலே
'இந்து' மதம்தான் — என்றும்,
இந்தியா என்றாலே
ஆரியப் பண்பாடு,
ஆரியக் கலை,
ஆரிய இலக்கியம்,
ஆரிய வரலாறு தாம்— என்றும்,

தம்பட்டம் அடித்துக் கொண்டிருக்கிறார், இந்த இனவெறி பிடித்த இராசிவ்காந்தி.

இந்த இனவெறி ஆட்டத்தை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகவே அனைத்துச் செய்தி நிறுவனங்களையும் பயன்படுத்திக்கொள்கிறார்.

ஒவ்வோர் இனநாட்டிலிருந்தும் ஏராளமான விளைச்சல் பொருள்களையும், உருவாக்கப் பொருள்க-ளையும் சுரண்டி, இந்தியத் துணைக் கண்டத்தின் சோம்பேறி முதலாளிக் கூட்டத்தினருக்கும், இன வெறிபிடித்து அலையும் ஆளும் கூட்டத்தினருக்-குமே பகிர்ந்து கொடுத்துக் கொள்ளையடித்து வரு-கின்றது இராசிவ் அரசு.

சான்றாக தமிழ் நாட்டில்,

—நெல்லும், வாழையும், சுருக்கரையும், தேயிலையும், குளம்பியை (காப்பியை)யும், தென்னையுமாக பல்வேறு விளைச்சல் பொருள்களையும்,

—நரிமணம் கன்னெய், நெய்வேலி நிலக்கரி, தூத்துக்குடி -உப்பு, முத்து, சேலம்- இரும்பு, அலு-மினியம் போன்று பல்வேறு கனிவளங்களையும்

—ஏராளமான உருவாக்கப் பொருள்களையும், உழைக்கின்ற தமிழ்நாட்டு மக்களின் உழைப்பை-யும் சுரண்டிக் கொண்டு போகிறது, இந்திய அரசு.

இங்ஙனம் சுரண்டிக் கொண்டு போகின்ற பொருள்கள், சுரண்டப்படுகிற நிலைமை மக்கள் உணர்ந்து கொள்ளக் கூடாத வகையில் 'இந்தி, மொழி வழியிலான திணிப்பாக அதை மாற்றி, வெறுமனே மொழி வழித் திணிப்புக்கான எதிர்ப்பை மட்டும் பிறதேசிய இனமக்கள் செய்-கின்ற வகையில் அமைத்து விடுகிறது, இந்தி ஆளும் கொடுநெறி அரசு.

இராசிவின் புகழ்ப்பாடல்களையே பாடுகின்றப்படி வானொலியையும், தொலைக்காட்சியையும் அமைத்து விட்டு, அதன் வழி மக்களின் மூளைகளை அருவருப்-பான கலையையும், அறிவுக்கு உதவாத வெற்றுப் பொழுது போக்குகளான விளையாட்டுகளையும், பார்ப்பன நச்சுக் கலை விழாக்களையும், பார்ப்பன மத வெறியர்களின் ஆளுமைகளையும் அதில் காட்டு வதோடு - அதுபற்றி மக்கள் பேசாமல் இருக்க, இவற்றை இந்தி மொழி வழியே திணித்து - மொழி வழி ஆளுமைமட்டும் இருப்பதாகக் காட்டுகிறது.

—வானொலியை — **ஆகாசவாணி**யாகவும், தொலைக்காட்சியை - **தூர்தர்சன்**ஆகவும் மாற்றி விட்டது.

—அண்மையில் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற அனைத்துத் துறைப் புதுமைகளையும் சமசுக்கிருதப் பெயரிட்டே அழைத்து, மொழி வழித் திணிப்பு இருக்கிறது என்று மட்டும் எண்ணுகிறபடி, மேம் போக்காகப் பார்ப்போர்க்குத் தெரிகிறபடி, உள்-ளுக்குள் சுரண்டல் வேட்டையை நடத்திக் கொண் டிருக்கிறது, இந்த இன வெறி அரசு.

**'அப்னு உற்சவ்,** — என்றும்,
**'இந்திரா விகாசு பத்ரா'** —என்றும்;
**'வாயு தூத்'** - என்றும்,

—சமசுக்கிருதத்திலேயே பெயரிட்டு இனவெ-றிப் பேயாட்டம் ஆடுகிறது.

தஞ்சைக்கும், தூத்துக்குடிக்கும், கோயம்புத்-தூருக்கும், நெய்வேலிக்கும் - ஆக இந்த 'வாயு-தூத்' துக்களை ஓடவிட்டிருக்கிறது.

—நரிமணம் கன்னெயை உடனே சுரண்டிச் செல்லவும், அங்குப் பணிபுரிகிற இன வெறியர்கள் நினைக்கிற பொழுதெல்லாம் ஓடோடி வருவதற்குத் தஞ்சையிலும்,

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

# அனல் மின் நிலையங்களும், எண்ணூரும்.

தப்பித் தவறிக் கூட, எந்தச் செயலையும் இது தமிழர்களின் நலனுக்காக அமைக்கப் பெற்றதென எளிதில் எண்ணிவிட முடியவில்லை.

எந்த ஒரு சிறு செயலிலும், ஆளுகிற இந்திய ஆளும் வெறிக் கும்பலுக்கும், வெளிநாட்டுச் சுரண்டல்காரர்களுக்குமான நலன்களிலேயே பெரும்பங்கு அமைந்திருக்கிறது என்பதை மறு சிந்தனைக்கு இடமின்றி ஏற்க வேண்டியுள்ளது.

இவ் வகையிலேயே எண்ணூர் அனல் மின் நிலையமும் எவ் வகை நெறிவிலக்கும் இல்லாமல் அமைக்கப்பட்டுள்ளது.

மின் நிலையங்கள்-பொதுவாகப் பல வகையில் மின்சாரத்தைத் தோற்றுவிக்கப் பயன்படுகின்றன.

நீர் விசை, அனல் வழி ஆவி விசை, அணு வாற்றல் விசை ஆகிய பலவகை விசைகளைப் பயன் படுத்தி மின் ஆற்றல் புதிய புதிய முறையில் கண்டு பிடிக்கப்பட்டுப பயன்பாட்டுக்குக் கொணரப் படுகின்றது.

ஆனால் இவ் வனைத்து விசை நிலையங்களும் மின்னாக்கியின் (டைனமோ - வின்) அடிப்படையிலேயே மின்சாரத்தைப் பெருமளவு தோற்றுவிக்கின்றன.

—நீர் மின்சாரம், நீர் வீச்சின் வேகத்தால் சுழலி இயக்கப்படுகிறது. சுழலுகிற உருளையின் மறுமுனை காந்தப் புலத்தை மின் ஆற்றலாக மாற்றுகிறது.

—இதே அடிப்படையில்தான் அனல் மின் நிலையமும் இயங்குகிறது.

—அந்த இரும்பு சுழலியைச் சுழல வைக்க அதிக அளவில் நீராவி அதன் மீது பாய்ச்சப்படுகிறது. அவ் வகையில் பாய்ச்சப்படுகிற நீராவி அந்த உருளையைச் சுற்றவைத்து மேற்படி முறையிலேயே மின்சாரத்தைத் தோற்றுவிக்கிறது. இந்த நீராவியை நிலக்கரியைக் கொண்டு நீரை மிகப்பெரும் கொதிகலன்கள் வழிச் சூடாக்கி உண்டு பண்ணுகிறார்கள்.

—அதை நிலக்கரி கொண்டு சூடாக்கி அதன் வழி நீராவி பெறுவதை அனல் மின நிலையத்தில் செய்கிறார்கள். அணுவைப் பிளந்து, அப்பிளப்பின்- வழி வெளிப்படும் வெப்பத்தினால் சூடாக்கி அதன் வழி நீராவி பெறுவது அணுமின் நிலையத்தில் செய்யப்படுகிறது.

—மேற்படி இரு மின் நிலையங்களும் முறையானபடி இயங்கவில்லையாயின் மிகவும் இழப்புகளை ஏற்படுத்தும்.

—அனல் மின் நிலையம் வழி வெளிப்படும் கழிவு சிறிது சிறிதாக நச்சுகளை உண்டாக்கி, மக்கள் உடலில் கலந்து உயிருக்குக் கேடு விளைவிக்கும்!

—அணு மின் நிலையக் கழிவோ அல்லது கசிவோ உடனடியாக ஆயிரக் கணக்கான மக்களைக் கொன்று குவித்துவிடும்.

—கடந்த ஆண்டு சோவியத்து ஒன்றியத்தில் 'செரன்போல்' -எனும் நகரில் உள்ள அணுமின் நிலையத்தில் ஏற்பட்ட அணு வெடிப்பு வழியிலான கசிவு ஆயிரக்கணக்கான மக்களின் உயிரைக் குடித்தது.

—அது போல, தமிழகத்தின் கல்பாக்கத்தில் நிறுவப்பட்டுள்ள அணுமின் நிலையத்திலும் ஏற்படாது என்பது உறுதியன்று.

—தமிழக மக்களின் தேவையை யொட்டி எத்தனையோ தொழிலகங்கள் தமிழக அரசாலும், மக்களாலும் கேட்கப் படுகிற பொழுதும், இந்த மக்களின் வேண்டுதலே இல்லாமல், தானாகவே இந்த இந்திய அரசு இந்தக் கல்பாக்கம் அணுமின் நிலையத்தைத் தொடங்கியது.

—இந்தியாவில் மூன்று இடங்களில் இத்தகைய மின் நிலையங்கள் இருக்கிற பொழுதும்; தமிழகத்தில்தான் வளமான பகுதியில் இந்த மின் நிலையம் உள்ளது. மற்ற இடங்களில் பாலை நிலத்தில் உள்ளது.

—மேலும் தமிழகத்தில் விரைந்து இரண்டாவது அணுமின் நிலையத்தை நெல்லையில் தொடங்க உள்ளது இந்திய அரசு.

—மேலும் இதன் வழி கிடைக்கும் மின்சாரத்தில் தமிழகத்திற்கு நான்கில் ஒரு பகுதி கூட கிடைப்பதில்லை.

—இவை இப்படி இருக்க, அனல் மின் நிலையங்களால் ஏற்படுகிற அழிம்புகளும், ஆளுமையர்களின் நலன்களும் கணக்கில் அடங்காதன.

—எண்ணூர் அனல் மின் நிலையத்தில் புகை மிகவும் அதிகமாக வருவதாகவும் அங்கு உள்ள மக்களுக்குச் சில நேரங்களில் மூச்சு அடைப்பது போன்றும், சில இதழ்களில் செய்திகள் கடந்த சில மாதங்களாக வந்து கொண்டிருந்தன. ஏன் திடுமென இவ்வாறு ஏற்படுகிறது என்பது அவ்வூர் மக்களுக்கே தெரியாத புதிராக உள்ளது.

—அந்த ஊர்ப் பகுதியில் பயிர்கள் சரிவர வளர்வதில்லை. அப் பகுதியில் உள்ள வீடுகள், மண்மீதெல்லாம் கருப்புப் படிவு படிந்து கிடக்கின்றது. இதற்குரிய காரணம் மிகவும் அதிர்ச்சி தரக் கூடியது. சில ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் இந்த நிலை இல்லை. — கடந்த இரண்டாண்டுகளாகத்தான் இந்தக் கொடிய நிலை உள்ளது. இரண்டாண்டிற்கு முன்னர், இந் நிலையத்திற்கு

(தொடர்ச்சி 8-ஆம் பக்கம்)

# பரிசுச் சீட்டு விற்பனையில் பிற மாநிலங்கள் தமிழ்நாட்டில் அடிக்கின்ற கொள்ளை.!

இந்தியாவில் உள்ள பிற மாநிலங்கள் தமிழ் நாட்டு மக்களை எத்தனையோ வகைகளில் சுரண்டிக் கொண்டிருக்கின்றன. உணவுப் பொருள்கள், வட்டிக் கடைகள், துணி மணிகள், அழகுப் பொருள்கள் முதலிய எத்தனையோ வகைகளில், தமிழ் நாட்டை அவை கொள்ளையடிக்கின்றன.

இவை போதாவென்று, பரிசுச் சீட்டுகளை வெளியிட்டுக் கொள்ளை யடிக்கும் நிலை கொஞ்ச நஞ்சமன்று. இவ் வகையில் ஒவ்வொரு மாநிலமும் தமிழ் நாட்டு மக்களை ஒட்டச் சுரண்டிக் கொழுக்கின்றன. இந்தியாவில் வேறு எந்த மாநிலமும் இப் பரிசுச் சீட்டு விற்பனையில் தமிழ் நாட்டைப் போல் சுரண்டப்படுவதில்லை என்பதை இங்குள்ள ஒவ்வொருவரும் அறிய வேண்டும்.

தமிழர்கள் இவ்வகையில் எவ்வளவு ஏமாளிகள், பரிசுச் சிட்டுக்காக ஏங்கிக் கிடக்கும் குருட்டு அட்டைகள் என்பதை இதன் வழி அறிந்து கொள்ளலாம். கீழே உள்ள புள்ளி விளக்கங்களைப் பாருங்கள். ஒவ்வொரு மாநிலமும் மொத்தப் பரிசுச் சீட்டுகளை அச்சிடுகின்றன; அவற்றில் எவ்வளவு பெரும் எண்ணிக்கையுள்ள சீட்டுகளை இங்கே விலை போக்குகின்றன என்பதை இப் புள்ளி விளத்தங்கள் தெரிவிக்கின்றன.

*தமிழ் நாட்டில் விற்பனையாகும் கிழமை முறை, சிறு பரிசுச் சீட்டுகளின் விளக்கம்.*

| மாநிலம்- சீட்டுப் பெயர். | குலுக்கல் நாள்: | அச்சிடப்பெறும் மொத்த சீட்டுகள். | அவற்றில் தமிழ் நாட்டில் மட்டும் விற்பனை ஆகுபவை. | விற்பனை விழுக்காடு. |
|---|---|---|---|---|
| 1. தில்லி - காமதேனு | வியாழன். | 18 இலக்கம். | 12 இலக்கத்து 60 ஆயிரம். | 70% |
| 2. உ. பி. - சனதா | வெள்ளி. | 15 ,, | 10 இலக்கம். | 66.67% |
| 3. நாகாலாந்து. | காரி. | 18 ,, | 12 இலக். 60 ஆயிரம். | 70% |
| 4. மேகாலயா. | ,, | 24 ,, | 16 இலக்கம். | 66.67. |
| 5. மணிப்பூர். | செவ். | 15 ,, | 10 இலக். | ,, |
| 6. சிக்கிம். | வியா. | 18 ,, | 12 இலக். 50 ஆயி. | ,, |
| 7. ,, -கஞ்சன் சங்கா. | திங். | 24 ,, | 16 இலக். 60 ,, | ,, |
| 8. இராசத்தான். | வெள். | 15 ,, | 1 இலக். 5 ,, | ,, |
| 9. அசாம் | திங். | 24 ,, | 16 இலக். | 66.67. |
| 10. பூட்டான், | ஞாயி. | 22 இலக். 70ஆயி. | 18 இலக். 90 ஆயி. | 70% |
| 11. பூட்டான்(லக்கிவீக்லி) | வியா. | 20 ,, | 14 இலக். 90 ஆயி. | 70% |
| 12. உ. பி. (சங்கம்.) | அறி. | 9 இலக். | 6 இலக். 30 ஆயி. | 70% |
| 13. திரிபுரா. | செவ். | 18 இலக். | 12 இலக். 60 ஆயி. | 70% |
| 14. பஞ்சாப். (சுபலக்மி) | வெள். | 15 இலக். | 1 இலக். 5 ஆயி. | 7 ,, |
| 15. உ. பி. | ஞாயி. | 12 இலக். | (தெரியவில்லை) | — |
| 16. புதுச்சேரி. | காரி. | 18 இலக். | 14 இலக். 40 ஆயி. | 80% |
| 17. இமாசல்(மகாலக்குமி) | செவ். | 27 இலக். | 18 இலக். 90 ஆயி. | 70 ,, |
| 18. உ. பி. (இசுடேட்) | செவ். | 27 இலக். | 6 இலக். | 22 2 |
| 19. மினி உ.பி.(தனலக்மி) | செவ். | 14 இலக். | 8 இலக். 40 ஆயி. | 60 ,, |
| 20. அரியாணு சனதா | வெள். | 12 இலக். | 8 இலக். | 66.67 ,, |
| 21. பஞ்சாப் (பிரியா) | வியாழ. | 14 இலக். | 9 இலக். 80 ஆயி. | 70 ,, |
| 22. ம. பி. | அறி. | 15 இலக். | 10 இலக். 50 ஆ. | 70 ,, |

—க. ப. அறவாணன்

தமிழர் மேல் நடந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்

Scanned with CamScanner

# அரப்பா நிலத்தில் வாழ்ந்த மக்களின் நிலை
# (Reading the Mind of the Harappans.)

முனைவர். எச். டி. சங்கலியா
தொல் வரலாற்றுப் பேராசிரியர்
(June'78 Science Today இதழில் வெளிவந்த கட்டுரையின் நேர் மொழியாக்கம்)

மெசப்பட்டோமியா, எகிப்து போன்ற பழமைச் சிறப்புப் பெற்ற நாகரிகம், இம் மண்ணிலும் புதையுண்டிருப்பது கடந்த எழுபது ஆண்டுகளுக்கு முன்தான் கண்டுபிடிக்கப் பெற்றது. அந் நாகரிகச் சிறப்பிற்கு உரிய இடங்கள்தாம் சிந்து வெளியில் உள்ள அரப்பா, முகஞ்சதரா — (முகைந்ததரை — புதைந்த நிலம்.) முகஞ்சதரா (MOHENJODARO) என்பவை. இந்த வாழ்ந்த மக்களின் நாகரிக அமைப்பில் கலை, கைத்தொழில் இவற்றின் சிறப்புகளோடு உயர்ந்த வாழ்க்கையமைப்பே தெரிய வருகிறது அங்கு குடிசைகளோ, கூடாரங்களோ இருந்ததற்கு எந்த ஒரு சான்றுமில்லை. அனைத்தும் கட்டிடங்களாகவே உள்ளன.

இதில் இன்னும் முகாமையானது என்னவென்றால் மற்ற நாகரிகச் சிறப்பிடங்களைப் போலவே அரப்பாவும், முகஞ்சதராவும் சிறந்த கல்வி நிலைவங்களாகும். அக் கல்வியைப் பெரும்பான்மை மக்கள் கற்றுத் திகழ்ந்தனர் என்பது முகஞ்சதரா, அரப்பா முத்திரை போன்ற கற் செதுக்கங்களிலிருந்து தெரிய வருகிறது. இச் செதுக்க முத்திரைகள் நம்பமுடியாத அளவில் 2,60,000 சதுர அயிரமாத்திரிகள் (Sq.km) பரப்பளவில் பரந்து பட்டு நமக்குக் கிடைக்கின்றன. அவ்வாறு இருந்த இந் நாகரிக மூலவர்களை நாம் இன்னும் உறுதிப் படுத்தாத நிலையிலேயே உள்ளோம். அவர்களின் அறிவு நிலைகளை நாம் முழுமையாக அறியாதவர்களாகவே உள்ளோம்.

இச் செதுக்க முத்திரைகளைப் புரிந்து கொள்ள பல முயற்சிகளை இயல்பாக எடுத்துள்ளோம். அவ்வாறு எடுத்த முயற்சிகளை முற்காலக் கண்டுபிடிப்பு,பிற்காலக் கண்டுபிடிப்பு என இருவகைகளாகப் பிரிக்கலாம். இதை முதன் முதலில் ஆய்ந்தவர் எல். ஏ. வாடெல் என்பவர். அவர் இந் நாகரிகம் சுமேரிய நாகரிகத்தை ஒத்தது என்றும், இ'து ஆரியர்களுடையது என்றும், இவர்களின் முத்திரையில் வேதக்கடவுள் உருவங்களையும் புராணத் தலைவர்களின் உருவங்களையும் பொறித்திருப்பதாகக் கூறிச் சான்றுகள் பல அமைத்திருந்தார். அதன் பின் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்திலிருந்து பேரா. எசு. இலங்குடன் என்பாரும் பிரித்தானிய அருங்காட்சி யகத்திலிருந்து சி. செ. காட் என்பாரும் இப் பட எழுத்துகள் முற்பட்ட பிராமி எழுத்துகள்; அஃதாவது' சிந்துவெளி எழுத்துகளுக்கு முற்பட்டவை என்று கண்டு பிடித்தனர். சர். பிளிண்டர் பெத்ரி என்பவர் எகிப்து பட எழுத்து ஆய்வில் ஈடுபட்டிருந்த தம் நீண்ட பட்டறிவினால் சிந்துவெளி முத்திரைகளை ஆய்ந்து அவை அரசு முத்திரைகளாக இருக்கலாம் என்று தம் கருதுகோளை வெளியிட்டார். அதன்பிறகு காசி இந்துப் பல்கலைக் கழகப் பேராசிரியர் முனைவர் பிரான் நாத் என்பவர் வாடெலின் கருத்தை ஆதரித்துப் படவடிவமும் கருத்துவடிவமும் பிராமியை மிகவும் ஒத்திருக்கின்றன என்ற தம் ஆய்வை ஒலி வடிவத்தை மிகப் பெரிய அளவில் ஒப்பிட்டுப் படவடித்தைக் குறுகிய அளவில் வெளியிட்டிருந்தார்.

கி. பி. ஏழாம் நூற்றுண்டுக்குப் பின் பெயர் பெற்ற மந்திர - சமயக்கலைகளில் ஈடுபடும் தந்திரம் பயிலும் மாணவராக இருந்த - இராமகிருட்டிணக் குடிலைச்சார்ந்த சுவாமி சங்கரானந்தா என்பவர் அவரின் தந்திர குறியீடுகளையும் ஒலிக்குறிப்புகளையும் சிந்து வரிவடிவத்துடன் ஒப்பிட்டுத் தம் ஆய்வை வெளியிட்டார். இது முற்றும் பொருந்தாத ஓர் உணர்ச்சிக் கூற்று ஆய்வு ஆனாலும் அவர் 1943- இல் வெளியிட்ட 'சிந்துவெளி வரலாற்று இரிக் வேத நாகரிகம்' (The Rig Vedic Culture of the Prehistoric Indus) என்ற கட்டுரை ஒரு பெரிய குழப்பத்தையே உண்டு பண்ணியது. கல்கத்தா பல்கலைக் கழகப் பேரசிரியர் பி எம். பருவா போன்றவர்களும் தந்திரப் பாடங்களில் தாம் சிந்து வெளி நாகரிகத் திறவுகோல் அடங்கியுள்ளது என்று நம்பினர். எவ்வாறுயினும் இந்த ஆய்வு முறையற்றதும் கால வரிசைக்கு மாறுனதும் ஆகும். தந்திரியம் சிந்து வெளி நாகரிகத்திற்கு பல நூற்றுண்டுகளுக்குப் பிற் பட்டதாகும்.

அகன்ற இக் கண்டு பிடிப்பில் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் சி. ஆர். அண்டர் முன்வந்து முதன் முதலில் முறையான ஆய்வை நிகழ்த்திப் படவெழுத்துப் பட்டியலை வெளியிட்டார். 750 செதுக்க வடிவங்களைப் ,படியெடுத்து, அவற்றைக் குறியீட்டு ஒப்பாய்வு, இணைவு ஒப்பாய்வு, கல்வெட்டு ஒப்பாய்வு, வரிவடிவு ஒப்பாய்வு, முதலியவற்றுல் நிகழ்த்தினுர். அவர் அப் படவெழுத்துகள் சொற்களின் ஒலியையே கொண்டுள்ளதாக இருக்கலாம் என்றும், தனித்தனி எழுத்துக-

(தொடர்ச்சி 9-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# தமிழ் நாட்டில் அதிகாரப் பித்து!

தமிழ்நாடு அடிமைப்பட்டுள்ளது. பண்பாடு, பொருளியல், அரசியல் துறைகளில் வீழ்ச்சி கண்டிருப்பதே அதற்குள்ள அடிப்படையாகும்!

ஆனல், தமிழின் பேரால், தமிழினத்தைச் சான்று வைத்துப் பிழைக்கும் போக்கு தீவிரமாகியுள்ளது. ஏன்? தமிழர்கள் 'விடிவுக்காக' ஏங்கிக் கிடப்பதைப் பயன்படுத்தி ஏற்றித் திரிகின்ற தலைமைகளிடம் அதிகாரப் பித்துள்ளது. மக்களிடம் பற்று என்பது 'பேரளவில்' மட்டுமே உள்ளது! ஆம், பெயரளவில்தான்! தங்கள் கைகளில் அதிகாரத்தை ஏந்தி, மக்களைச் சுரண்டும்போது இவர்கள் 'தமிழர்கள்' என்ற தகுதியினை இழந்து போய்விடுகின்றனர்கள். மாறாக, உலக வல்லரசியம், பன்னாட்டு முதலாளியப் பிடியில் சிக்கி இடையீட்டாளர்களாக வாழ்ந்து வளம் பெருக்கிடத் துடிக்கின்றனர்கள்!

அண்மையில் 'ஈழச் சிக்கலில்' கூட இவர்களின் மிடுக்குகளுக்குப் பயன்படுத்தும் போக்கு உள்ளதை அனைவரும் அறிவோம்!

தமிழினம் தமிழ்நாட்டில் இரு கூறுகளாகி உள்ளது. தலைமை வெறிதான் காரணம் என்பதன்று. நாம் தமிழக மக்களை எந்த நெறியில் அழைத்துச் செல்வதென்பதைப் பற்றிக் குமுகவியல் அறிஞர்கள் எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

தமிழ்மக்கள் ஊராட்சி பற்றியோ, ஒன்றியம் பற்றியோ, நாட்டைப் பற்றியோ எண்ணிப் பார்க்கவும் நேரமின்றி உழைப்பதிலும், உண்பதற்குத் தேடுவதிலும் காலத்தைத் தேய்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அறிவைக் கூராக்கிப் போலியான மாற்றுடைகள் மூலம் மறைத்துக் கொண்டு தலைமையில் தொற்றிக் கொண்டிருக்கிற எதிரிகளை இனம் காட்டுதல் வேண்டும். அதற்கான மெய்யியல் கல்வியை, அரசியல் அறிவினை ஊட்டுதற்கு இளைஞர்கள் அணிதிரளுதல் நல்லது.

சீரழிந்துவரும் பண்பாட்டுத்தளத்தைத் தொடர்ந்து பல்வேறு சிக்கல்கள் போராடும் இளைஞர்களை நோக்கி எழுதல் இயல்பே. அவற்றை நன்கு தெளிந்து தமிழின மக்கள் எழுச்சிக்குத் திட்டமிடுதல் வேண்டும்! —பறம்பை அறிவன்

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆசுத்திரேலியாவிலிருந்து நிலக்கரி வாங்கப் பெற்றது. ஆசுத்ரேலியாவிலிருந்து வாங்கப்பெற்ற அந் நிலக்கரியின் விலை ஒரு கல்லெடை (டன்) உரு. 600/- மட்டும்தான். மேலும் அ'து உயர்தரமான நிலக்கரியும் ஆகும். அந் நிலக்கரி பயன்பாட்டில் இருந்தபொழுது இது போலும் புகைத் தொல்லையே இல்லை. மேலும் அந்த நிலக்கரி பயன்படுத்திய பொழுது நிலையத்தின் கொதிகலன் எவ்வகைப் பழுதும் ஏற்படாமல் சிறப்பாக வேலை செய்தது.

—ஆனல், இப்பொழுது, இந்த இரண்டாண்டுகளாகப் பீகாரிலிருந்து நிலக்கரி வருகிறது, இந்த நிலையத்திற்கு! அதன் விலையும் ஒரு கல்லெடை (டன்) உரு 2000/- ! இந்த நிலக்கரியில் ஏறத்தாழ கல்லெடை ஒன்றுக்கு 50 அயிர எடை (கி.கி.) கல் கலக்கப் பெற்றிருக்கிறது. மேலும் இந்த நிலக்கரி பயன்படுத்தத் தொடங்கியதே இவ்வகைப் புகைக்கும், மூச்சடைப்புக் காற்றுக்கும் காரணமாக அமைந்தது.

—மேலும், இந்த நிலக்கரியைப் பயன் படுத்துவதினல், அனல் மின் நிலையக் கொதிகலன் அடிக்கடி பழுதடைகின்றது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை அதன் பழுது பார்ப்புச் செலவு வேறு மிகுமின் தொழிலகத்திற்கு (BHEL) வரவாகப் போகிறது.

—இங்ஙனம், இந்திய நாட்டு ஒற்றுமை என்று வறட்டுக் கத்துக் கத்திக் கொண்டிருக்கிற அரசு, பீகார் நிலக்கரிக்கு விற்பனைச் சந்தை தேட வேண்டியும், (BHEL) - தொழிலகத்திற்கு வேலை கொடுக்க வேண்டியும் செய்கிற அதிகார வெறித் தனத்தால், அழிபடுவது தமிழன் தான். தமிழக மக்கள்தாம் அல்லல்படுகின்றனர்.

—மேலும், இந்த அனல் மின் நிலையத்திலிருந்து கிடைக்கும் மின்சாரமும் தமிழ் நாட்டிற்குக் கிடைக்காமல், பிற வட மாநிலங்களுக்கே பெரும் பகுதி போகின்றது.

—ஆக ஏமாறுபவன் இருக்கின்ற வரை, ஏய்ப்பவன் ஏய்த்துக் கொண்டேதான் இருப்பான்!

—இருக்கிற அனைத்து ஏமாற்றங்களையும் தமிழர்கள் முழுமையாக உணர்ந்து, நிலையான தீர்வு நோக்கிப் போராடுவதிலேயே வெற்றி கொள்ள முடியும் என்பது உறுதி.

—விடுதலை வேட்பன்.

## ஓர் அறிவிப்பு!

'தமிழ்நிலம்' புதிய வடிவில் கிழமைதோறும் வெளிவரவும் எல்லா வகையிலும் மேன்மேலும் இதன் பொலிவும் வலிவும் வளரவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்று வருகின்றன. நம் தமிழின மீட்புக்கு இதுவே சிறந்ததொரு வாளாகவும் கேடயமாகவும் திகழ்வதாகும். அனைத்து நிலைகளிலும் நம் அன்பர்கள் பெரிதும் உதவுவார்கள் என நம்புகின்றோம்.

அன்பர்கள் ஆங்காங்கு நடைபெறும் இயக்கச் செய்திகளையும், தமிழின விழிப்புத் தொடர்பான செய்திகளையும், இன மீட்புக் கட்டுரைகளையும் சுருக்கமாக எழுதி விடுக்க வேண்டுகிறோம்.

Scanned with CamScanner

# செய்யாறு - மாத்தூரில் உ.த.மு.க சிறப்புக்கூட்டம்

"வந்தது விடுதலை" என வாய்ப்பறை கொட்டும்தேசியங்கள், 'ஆமாம் ஆமாம்' எனத் தாளமிடும் அவர்தம் அடிவருடிகள், வந்தவிடுதலையில் இது சொட்டை, இது சொள்ளை என நக்கலிட்டு மக்களைக் கவர்ந்திழுத்து நாற்காலிக் கனவு காணும் அரசியல் கேடர்கள், இவர்களுக்கு இடையில் விடுதலையா? வந்ததா? யாருக்கு? எப்போது? என்று வாரத விடுதலையை விண்டுகாட்டி உண்மை விடுதலைக்கு வழி கூட்டும் ஓர் உழைப்பியக்கம் **உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்** என்பது தெரிந்ததே

உ. த. மு. க. வின் இன விடுதலைப் பணியின் ஒரு கூறான 'விடுதலை விளக்கக்' கூட்டம் வடார்க்காடு (வடக்கு) மாவட்டத்தில் செய்யாறு வட்டம் மாத்தூர் எனும் சிற்றூரில் கடந்த ஆகத்து 15-ஆம் பக்கல் மாலையில் நடைபெற்றது.

ஒரு சிற்றூர்ப் புறத்தில் நடத்துகிறோமே எனத் தம்மைக் குறைத்து மதிப்பிட்டுக் கொள்ளவில்லை, கழகத்தின் செயல் மறவர்கள். அவ் வூரில் பேராயக் கட்சிக்குக் கால்தூக்கிக் கட்சியினரின் மறைமுக எதிர்ப்பும் இருந்தது.

எனினும் கூட்டம் சிறப்புற அமைந்தது. கழகத்தின் செங் கொடிகள் கூட்டத்திடலில் வீச்சம் விளைவித்து ஆடின. இரவு 7 மணி அளவில் செல்வி. அருள்மொழி தமிழன்னை வாழ்த்துப் பாட கூட்டம் தொடங்கியது. வ. ஆ (வடக்கு) மாவட்ட அமைப்பாளர் திரு **மா. செ. தமிழ்மணி** அவர்களின் தலைமை உரை கழகத் தோற்றம், அதன் கொள்கை விளக்கம் என்று கூறும் அளவில் நின்றது. அதன் பின் செய்யாறு வட்டச் உ. த. மு. க செயலர் திரு மா. சீராளன், அரக் கோணம் வட்டச் செயலர் திரு **மு. கதிரவன்**, இவர்கள் வராத விடுதலையைப பற்றி விளக்கினர். சென்னை மாவட்ட உ. த. மு, க செயல் மறவர் திரு **குணத் தொகையன்** அவர்கள் ஊர்ப்புற மக்களுக்கு விளங்கும் படியான எடுத்துக் காட்டுகளுடன் 'கருத்துச் செறி'வுரை நிகழ்த்தினர்.

விடுதலை அரிமாக் குருளையர் **தமிழ். முகிலன், த. தமிழ் இனியன்** இவர்களின் எழுச்சிப் பேச்சு படித்த இளைஞர்களை எழுச்சி பெற வைத்தது. இவர்கட் கிடையில் தென்மொழியின் நீண்டநாள் அன்பர் **புஞ்சை கோதண்டம்** அவர்களின் எழுச்சி உரை ஊர் மக்களைக் கவர்ந்தது.

கத்தியின்றி, அரத்தமின்றி விடுதலை வந்ததா, அப்படி வந்த விடுதலைதான் பார்ப்பனத் தரகு முதலாளியர் தவிர மற்றவர்கட்கு வந்ததா என்ற விளக்கங்களை அவர் புள்ளி விளக்கங்களுடன் விளக்கினர். மேலும், தமிழின இளைஞர்களை எப்படி எல்லாம் தம் மான உணர்வுகளை அரசியல், திரைப்படமாயை முதலியவற்றில் இழந்து கிடக்கின்றனர் என்றும் விளக்கினர்.

அடுத்து வ. ஆ (வடக்கு) மாவட்ட உ. த. மு. க செயலர் திருமிகு புலவர். **குமர தன்னொளியனார்** அவர்களின் எழுச்சி உரை கூடி இருந்தோர்க்கு இன உணர்வை ஊட்டுவதாய் அமைந்தது. அவர் தம் உடல் நலக் குறைவிலும் அன்னார் தமக்கே உரிய எடுப்பான குரலில் கழகத்தின் ஏழு கொள்கைகளையும் விளக்கினர்.

இறுதியில், தலைவர் **தமிழ்மணி** அவர்கள் **பாவலரேறு** அவர்களின் "முன்னை இருந்தவர்" எனத் தொடங்கும் இயக்க உயிர்நாடிக் கருத்தமைந்த பாடலைப் பாடினர். அப்பாட்டு அமைதியான அவ்விரவில் எழுந்த இடிமுழக்கென திசையெலாம் அதிர அமைந்தது. பாவலரேறு அவர்களே அப் பாட்டொலியில் விளங்கினர் எனில் அது மிகையன்று.

(தொடர்ச்சி 10-ஆம் பக்கம்)

(7-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளாகவோ அவை அகர வரிசை முறைப் படியே அமைக்கப் பட்டனவாகவோ இல்லை என்று கருத்து தெரிவித்தார். மேலும் அவை பிராமியுடன் தொடர்புடையதாக இருக்கலாம் என்றார். ஆனால் இது போலவே சிந்து வெளி எழுத்து வடிவங்களும் அசையொலி (Syllabary) கொண்டவையாகவே இருந்தது காணப்பட்டன. இது அவரின் தோல்வியாகக் கூட இருந்தது. பிராமி அசை யொலி மொழியாக இருந்தாலுங்கூட படஎழுத்துகள் அதற்குத் தேவையில்லாமல் இருந்திருக்கிறது. எனவே இவ்விரு வரிவடிவங்களும் வேறுபடுவதற்குக் குறைந்தது 2000 ஆண்டுகளுக்கு மேல் கால எல்லை தேவைப்பட்டிருக்க வேண்டும். எனவே இவ் வெழுத்துகள் சிந்துவெளி வரிவடிவத்தின் மூல இயல்பைப் பெற்றுள்ளன. அங்கு வாழ்ந்த மக்களின் தனித் தன்மையை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன.

எவ்வாறாயினும் மொழியைப் பற்றியோ அதன் வரிவடிவத்தைப் பற்றியோ, ஆராயாமல் இந்நாகரிகம் பற்றி முழுமையாகக் கூற இயலாது. பம்பாய், சேவியர் கல்லூரியின் பணியாற்றிய பேராசிரியர், சமயத்தந்தை காலஞ்சென்ற ஈராசு, சிந்து வெளி மக்கள் திராவிடரோ முந்து திராவிடரோ ஆக இருக்காலம் என்ற சர். சான் மார்சலின் ஆய்வுக் கருத்தைப் பெருமளவில் தம் ஆய்வுக்காக எடுத்துக் கொண்டார். சர். சான் மார்சல் தம் ஆய்வின் போது கண்ட குறிப்புகளை நுட்பமாக ஈராசு நோக்கினர். அவற்றில் குறிவழிபாடு பரந்து பட்டிருப்பதைக் கண்டார். எனவே அவ்வாறு குறிவழிபாடு உடைய நாகரிகம் உறுதியாக ஆரியருடையதாக இருக்க முடியாது என்று முடிவெடுத்தார்.

—(தொடரும்)

Scanned with CamScanner

(முதல் பக்கத் தொடர்ச்சி)
இளைஞர்களே கருவிகளைக் கையிலெடுக்கிறார்கள்; வன்முறையில் போராடுகிறார்கள். அவர்களை வன்முறையாளர்கள் என்றாலும் தாழ்வில்லை. கொடுமையாளர்கள், தீயவர்கள் என்றெல்லாம் பட்டம் சூட்டி அழைப்பது கொடுமையிலும் கொடுமையானது. போராட்டம் கொடுமையாகாது! அவ்வாறானால் அதே முறைகளைக் கையாளும் அரசும் கொடுமையானதே!

சட்டத்தையும் அதிகாரத்தையும் தங்கள் கைகளில் வைத்துகொண்டு, பதவி மமதையும் மத வெறியும் பண வலிமையும் கொண்ட அரசு, எந்தக் குடியரசு நடைமுறைக்கு மதிப்புக் கொடுக்கிறது? கொடுத்தது? எந்த மக்களின் கூக்குரலுக்குச் செவி சாய்த்தது? சாய்க்கிறது?

பல்வேறு மக்கள் நலக் கருத்துகளையும் அவற்றை எத்தகையவர் எடுத்துக் கூறினாலும், பல வகைகளில் முறையிட்டாலும், இப்போதைய இராசீவின் கொடுங்கோன்மையரசு, அவற்றுக்கு இரக்கம் காட்டுவதாகவோ ஏற்றுக் கொள்வதாகவோ இல்லை; அவற்றுக்கு நல்ல முறையில் தீர்வு காண்பதாகவும் இல்லை. இதை இன்றுள்ள சிறுபான்மை மக்கள் தெளிவாக உணர்ந்து விட்டனர் என்பதற்கடையாளமே, ஆங்காங்கு நடைபெறும் மென்முறை, வன்முறைப் போராட்டங்கள் ஆகும்.

பஞ்சாபில் கொலைகள் கொள்ளைகள் நடைபெறுகின்றன என்றாலே, அவற்றிக்கு மூல காரணம் அரசு அவற்றை ஒடுக்குவதற்கும் அடக்குவதற்கும் கடைப்பிடிக்கும் வன்முறைக் கொடுமை நடவடிக்கைகளே! அதிகாரத்திலிருப்பவர்கள் காவல் துறையையும் படைத்துறையையும் தங்கள் முதலதும் முடிவானதுமான கருவியாகக் கொள்வார்களானால், மக்களுக்கும் போராடிச் சாவதைத் தவிர வேறு வழியில்லை என்றாகி விடாதா? இப்பொழுதுள்ள ஆட்சினர் தாங்கள் அன்று விடுதலைக்குப் போராடியது, தமிழரசன்களின் முறைகளைக் கைக்கொண்டுதானே! அடக்கப்படும், ஒடுக்கப்படும், அடிமைப் படுத்தப்படும் மக்கள், அடங்கி ஒடுங்கி அடிமைப் பட்டுச் சாவதை விடப் போராடிச் சாவது ஒன்றும் இழுக்கோ இழிவோ ஆகி விடாது!

(தொடர்ச்சி 11-ஆம் பக்கம்)

---

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)
—தூத்துக்குடி முத்தையும், கனிவளங்களையும், உப்பையும் வாரிக் கொண்டு செல்லவும், தூத்துக்குடி அனல் மின்நிலையம், ஆளும் வெறியர்களின் பிற தொழிலகங்களில் பணிபுரிகிற இன வெறியர்கள் உடனுக்குடன் போய்வர - தூத்துக்குடியிலும்,

—துணி மணிகளையும், ஊட்டி தேயிலை - பிற விளைச்சல் பொருள்களையும் சுரண்டிக் கொண்டு போகக் கோவையிலும்,

—நிலக்கரியை எடுத்துச் செல்லவும், 'இந்தி' இனவெறியர்களும், பார்ப்பனிய வெறியர்களும் உடனுக்குடன் வந்து செல்ல - நெய்வேலியிலுமாக,

—இந்த 'வாயுதூத்'தைப் பறக்க விட்டிருக்கிறது. அதற்குத் தேசிய மொழிகளில் பெயர் வைத்து விட்டால், சுரண்டலுக்காக இவை அமைக்கப் பெற்றதென எளிதில் மக்களுக்கு விளங்கிவிடும் என்பதற்காகவும், 'வாயுதூத்'-என்று பெயர் வைத்து விட்டால், ஒன்று மொழித் திணிப்பு வழி ஆளுமை செய்யலாம் என்றும், இரண்டாவதாக அதற்குத் தமிழில் பெயர் வைக்க வேண்டுமெனப் போராட்ட நோக்கம் குறுக்கப்பட்டுவிடும் என எண்ணியும் இந்த நடைமுறையைப் பின்பற்றுகிறது இந்த இன வெறி அரசு.

இந்திப் படங்களை, அதிகமான பொருட்செலவிலும், அருவருப்பாகவும் எடுத்து ஓடவிடும் பொழுது பிற பண்பாடும், நாகரிகமும் அழிக்கப் படுவதால் - சிதைக்கப் படுவதால் பிற மொழியுணர்வு மறக்கடிக்கப் படுவதுடன், பிற தேசிய இன மக்களின் காதுகளில் இந்தி மொழியே கவர்ச்சிக் காட்சிகளுடன் ஒலிக்கப்பட்டுக் கொண்டிருக்க வேண்டுமாய்ச் செய்கிறது இந்த 'இந்தி' அரசு.

ஆக, 'மண்வாரி' எந்திரம் போல், இந்திய தேசிய இனங்களிடையே, 'பணவாரி' எந்திரமாக இயங்குகின்ற இந்த இனவெறி பிடித்த இந்த அரசு, 'இந்தி' மொழி வெறி கொண்டு அச் சுரண்டலுக்கான பண வெறி எந்திரத்தின் கைப்பிடியாக 'இந்தி மொழி'யையும் பயன் படுத்துகிறது.

இவற்றைக் கண்டுகொண்டு, நம் நிலத்தில், நம் மக்களின் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள இந்த 'இந்தி' இன வெறியர்களின் ஆளுமையை வெட்டி விழ்த்துவோம்! — குத்தீட்டி.

---

(9-ஆம் பக்கத் தொடர்ச்சி)
மாவட்ட அமைப்பாளரின் பிறந்த ஊரான அச் சிற்றூர் மக்கள் நிரம்பி இருந்துகேட்ட அக்காட்சி, அமைப்பாளரின் பொதுத் தொண்டில் அம் மக்கள் வைத்திருக்கும் மதிப்பை உணர்த்துவதாய் அமைந்திருந்தது. இதைப் பேருரை நிகழ்த்திய புலவர். குமர. தன்னொளியனும், சிறப்புரை நிகழ்த்திய புஞ்சை- கோதண்டம் அவர்களும் தம் உரையில் சுட்டிக் காட்டினர். பின்னர் இந்தியை எதிர்த்துச் சிறைசென்ற அவ்வூர் திரு. சின்னசாமி அவர்கள் அனைவர்க்கும் நன்றி கூறினர்.

இந்த 'விடுதலை' விளக்க'க் கூட்டத்தின் பின் உ. த. மு. க இப்பகுதியில் தன் தனி நெஞ்சுணர்வால் ஊர்ப்புற மக்களை எழுச்சியுற வைக்கும் எனும் நம்பிக்கை ஒளி மக்களின் பேச்சுக்களில் இருந்து அறிய முடிந்தது.

செய்தி: செல்வி த. தமிழிசை

Scanned with CamScanner

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழரசன்கள் கொடுமையாளிகள் என்றால், வாஞ்சி நாதன்களும், பகத்சிங்குகளும், ஏன் திலகரும், படேலும், நேருவும் காந்தியும் கூடக் கொடுமையாளர்கள் தாம்! போராட்டக் களத்தில் கொடுமை என்பதற்கே இடமில்லை. ஆட்சியிலிருப்பவர்களாலேயே போராளிகள் தூண்டப் படுகிறார்கள்! இது வரலாறு! அடிமைத் தனத்தையும் அதிகார வெறியையும் ஒப்புக் கொள்பவர்கள் மட்டுமே நல்லவர்களாகி விட முடியாது! விடுதலை அகராதியில் அவர்கள் இரண்டகரே! (துரோகிகளே!). இனி, இதைப் பற்றிய சொல்லையும், பொருளையும் நடைமுறைகளையும் பற்றிய கோட்பாடுகள் இத்துடன் நிற்கட்டும்! அதைப் பற்றிக் காலத்தால் பேசுவோம்!

ஆனால், தமிழரசனை யுள்ளிட்ட ஐந்து விடுதலைப் போராளிகளையும் அறிந்தோ அறியாமலோ ஏதோ ஒரு வேகத்தில் அடித்துக் கொன்றார்களே, அந்தச் செயலை — அவர்களுக்கு மக்கள் கொடுத்த தண்டனை என்று பாராட்டியதுடன் - அதில் ஈடுபட்டவர்களுக்குப் பரிசையும் கொடுத்து, ஊக்கப் படுத்துகிறதே அரசு -அதுவும் ம. கோ. இரா. வின் தமிழக அரசு — அதைத்தான் நம்மால் விளங்கிக் கொள்ள முடியவில்லை.

மக்களரசு என்பதால், போராளிகளையோ, உண்மையான கொள்கை, கொலை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டவர்களையோ, மக்களே தீர்த்துக் கட்டலாம், தண்டனை கொடுக்கலாம், அதை அரசு பாராட்டும், பரிசளிக்கும் என்றால், ஆட்சியிலிருப்பவர்களும், அவர்களை முட்டுக் கொடுத்துத் தாங்கிக் கொண்டிருக்கும் மதமுதலாளிகள், பணமுதலைகள் போன்றவர்களும் கூட அதற்கு விலக்கல்லர் என்றுதானே பொருள் கொள்ள வேண்டி வரும்.

இத்தகைய மரபு உருவாக வேண்டும் என்று ஆட்சியாளர்கள் விரும்புகிறார்களா? விரும்புகிறார்கள் அதை வரவேற்கிறார்கள், வாழ்த்துப் பாடுகிறார்கள் என்றால், அரசாளப் பிறந்தவர்கள், தாங்கள் வெட்டும் குழியில் தாங்களே விழப் போகிறார்கள் என்பதை மறந்து விட வேண்டா.

இனி, தமிழரசன் குழுவினர்க்குத் தண்டனையளித்த பொன்பரப்பி மக்களுக்கு ஒரு சொல். அடிமைகள் ஆளப்படுவோருக்குத் துணைபோகிறார்கள் என்றால், அவர்கள் அறியாமையில் இருக்கிறார்கள் என்பதுதான் பொருள். ஏழை உழவர்களுக்கும், கூலித் தொழிலாளர்க்கும் விடுதலை வாங்கிக் கொடுக்கும் நோக்கத்துடன்தான் தமிழரசனின் விடுதலைப் படை போராடியது. இனி அவரைப் போன்ற வேறு சிலரும் போராடி வருகிறார்கள். அத்தகையவர்களின் போராட்ட முயற்சிகளைப் பொதுமக்கள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டும். இனி, அடையாளம் கண்டு கொள்வதுடன் நில்லாமல், வல்லாண்மை அரசின் ஒடுக்கல் முயற்சிகளை முறியடிப்பதற்கு அப் போராட்ட ஆற்றல்களுடன் பொதுமக்கள் துணை நிற்பதே நல்லது. அஃது அவர்களின் கடமையும் கூட!

---

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மணவை வட்ட உ. த. மு. க. தலைவருமான திரு. க. கண்ணன் கூட்டத்திற்குத் தலைமை ஏற்றார் மணவை வட்ட உ. த. மு. க. பொருளர் பழ. தமிழாளன் எல்லாருக்கும் இனிய வரவேற்புரை யாற்றினார். பின்னர் கரு. இராச கோபாலன், அறிவுச் செல்வன், தமிழ்நெறியன், கல்லை அருட்செல்வனார் உரையாற்றினர்.

உலகத்தமிழின முன்னேற்றக் கழகத்தின் எழு பெருங் கொள்கைகளையும் அதன் உழைப்பு, மொழி இன நாட்டு மீட்சிக்கு ஆற்றும் பணிகள் ஆகியன பற்றியும் மணவை வட்ட உ. த. மு. க. செயலர் புலவர் **திருக்குறள் நாவை. சிவம்,** உ. த. மு. க. துணைப் பொதுச் செயலர் **தென்னவன்கோ** ஆகியோர் உரைப் பொழிவாற்றினர். இதனையடுத்து இறுதியாக **உ. த. மு. க. முதல்வர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்** அவர்கள், உலகிலுள்ள 160 நாடுகளில், 47 நாடுகளில் தமிழர்கள் வாழ்கிறார்கள். 1000 ஆண்டுகட்கு முன் வெளி நாடுகட்குக் கூலிகளாகச் சென்ற அவர்கள் அந்நாடுகளை வளநாடுகளாக மாற்றினர். உலகில் எல்லா இனமும் அதனதன் மொழியாலும், நாட்டாலும் பெயர் குறிக்கப் பெறுகிறது. ஆனால் தமிழர்கள் தம்மை எந்தப் பதிவிலும் தமிழர் என்றோ திராவிடர் என்றோ சொல்லவும் எழுதவும் முடியாது. தமிழ் இனம் இன்று சாதியால் சுட்டப் பெறுகிறது. வரலாற்றுச் சான்று காட்டி நம் மாநிலத்திற்கு அண்ணா அவர்கள் தமிழ்நாடு என்று பெயரிட்டார்கள். இந்த உலகில் முதன் முதல் தோன்றிய மொழி தமிழே. உலகில் தோன்றிய 6000 மொழிகளில் இன்று ஏறத்தாழ 3000 மொழிகள் உள்ளன. 600 கோடி மக்கள் வாழும் உலகில் மிகுதிப் பேர் சீனமொழி பேசுகிறார்கள். அடுத்து ஆங்கிலமும் அடுத்து உருசிய மொழியும் பேசுகிறார்கள். கி. பி. 6 ஆம் நூற்றாண்டில் தோன்றியது, ஆங்கிலம். ஆனால் 50000 ஆண்டுகட்கு முன் தோன்றியது தமிழ். இந்தத் தமிழ் இன்று பல்வேறு இன, அரசியல் ஆரவாரத் தாக்கங்களால் வீழ்ச்சி பெற்றுள்ளது. பெயர்கள் வடமொழியில் அமைத்துக் கொண்டோம். கோவில்களில் வடமொழியான சமசுகிருதத்தையே வாழவிட்டோம். கல்விக் கூடங்களிலும் தமிழ் இல்லை. அரசியலிலும் தமிழ் இல்லை. நம்மிடம் ஒற்றுமை உணர்வும் இல்லை. காட்டிக் கொடுக்கும் வஞ்சக உணர்வு ஓங்கிவிட்டது. அறி-

(தொடர்ச்சி 12- ஆம் பக்கம்)

## யாழே!

யாழே — வள்ளுவன் வாழ்த்திய
பண்ணெழில் யாழே!
உளரெல்லாம் ஏழ
உயிர்ப்பிசை பாடிய இனிய யாழே!
நீ எரிகிருய் என்ருல், நம்பவோ?

சிங்களர் அரசின்
இழ்ந்த செயலால்
இனத் தமிழர் பெற்ற
பசுங் கொடிகள் கருகின;
பால் வாய்க் குழந்தைப் பூக்கள்
உதிர்ந்தன, எரிந்தன —
இன்னமும் உலகத் தமிழர்
உறக்கம் கொள்கிருர்!

தலையாலங்கானம்
தமிழர்க்குள் நடந்த போரடா;
கனக விசயர் கல் சுமக்கக்
கண்டதும் கற்பனை ஆனதே;
'பேச்சில்' இழுத்தே,
நம் பெரும் பொழுதை மாய்த்தோம்;
போரினில் - களத்தினில்
வீட்டினில் எரியும் தமிழரைக்
"காப்பதா — வேண்டாமா,"
பட்டி மன்றம் போடுகின்ற
பழுதைகளே, உங்களை,
மீறி எழும் படைகளைப் பாரீர்;
பகைவிழும் காணீர்!

—பறம்பை அறிவன்.

(11-ஆம் பக்கத் தொடர்ச்சி)
யாமையில் மூழ்கிக் கிடந்தவர்களைத் தந்தை பெரியார் விழிப்புப்படுத்தினர். உழவர்கள் இன்னும் விழிப்புணர்வு பெறவில்லை. உழைக்காத பார்ப்பனர் விழிப்புணர்வுடன் உள்ளார்கள். எனவே பார்ப்பனர்க்கு நாம் அடிமையாகி இன்னும் இந்துவாக உள்ளோம். வருணாச்சிர தர்மம் - நால்வகைச் சாதி இவற்றிற்கு ஆட்பட்டு வாழும் நாம் மதத்தாலும் இந்து, முசுலீம், கிறித்துவர் என்று வேறுபட்டுக் கூறுபட்டுக் கிடக்கிறோம். நம் இனத்திற்கு வந்த இழிவை எந்த அரசியல் கட்சியும் முழுமையாகச் சிந்திக்கவில்லை. கலைத்துறை விழித் திரைப்படக் கூத்து, தொலைக்காட்சியில் கும்மாளம், இந்தித் திணிப்பு இவற்ருல் இன நல உணர்வு அழிக்கப் பெறுகிறது. உழவர்கட்கு விதைகள், உரம், பூச்சி மருந்து, மின்சாரம் முறையாகக் கிட்டவில்லை. தொழிலாளர்கட்கும் வாழ்க்கை உரிமை இல்லை. இத்தகு உலகியல் வாழ்வியல் மொழியியல் இனவியல் சிந்தனைகளை எடுத்துக் கூறும் உழைப்பு இயக்கமே உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் என்று 2 மணி நேரம் அரிய தொரு கொள்கை விளக்கப் பேருரையாற்றினர். இறுதியில் பாவலர் அறிவுச்செல்வன் நன்றி கூறினர். ஆலை. ம. கோபாலனரின் தமிழின ஒன்றிணைப்புப் பாடலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது. துவரங் குறிச்சிப் பகுதிக்குப் பாவலரேறு அவர்களின் எளிய - கருத்து - உணர்வார்ந்த உரை பெரிதும் விழிப்பூட்டியது எனலாம் செய்தி- தமிழ் மகன், மணவை.

**உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!**

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

**சிந்தனைக்கு - 10**

எங்கே அதிகாரம், அடக்குமுறை, பணம் மூன்றும் ஒன்று சேர்கின்றனவோ, அங்கே மக்கள் போராட்டம் வெடிக்கிறது.

(ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் வெளிவரும்) இதழ் எண்- 91. TN/MS (C) 657

அனுப்புதல்:
**தமிழ்நிலம்**
5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829

உறுப்பினர்:
ஆண்டுக் கட்டணம் உரு. 44-00
அரையாண்டுக் கட்டணம் உரு. 22-00

பெறுநர்: நூல் அஞ்சல்
திரு. / திருவாட்டி

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5.